கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

அ.வ.எண். 67-2021

வா.சா.1- பழனிசாமி

நாள் : 04.01.2023

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : பணம் வாங்கியதாக சொல்லும் நேரத்தில் 1ம்பிரதிவாதி வருவாய் துறையில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில் இருப்பார் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதியும், எனது மனைவியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். எனது மனைவி வேலைக்கு எதுவும் செல்லவில்லை. வீட்டில் தான் இருக்கிறார். எனது மனைவி பதிவு செய்யாத சீட்டு நடத்துவதும், இடங்கள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்தும் வந்தார் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி சிபாரிசு செய்து நிறைய நபர்களை சீட்டு போட வைத்தார் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி எனது மனைவிக்கு இடங்களை வாங்கி விற்பனை செய்வது சம்மந்தமாக ஆட்களை அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. சங்கரம்மாள் என்பவர் சீட்டுப்பணம் பெற்றுக்கொண்டு தலைமறைவாகிவிட்டார் என்றால் சரியல்ல. தாவா கடன் தவிர்த்து வேறு எந்த பண கொடுக்கல் வாங்கலும் பிரதிவாதியிடம் இல்லை. 2ம்பிரதிவாதி பல நபர்களை சீட்டிற்காகவும், இடங்கள் வாங்குவதற்கும் எனது மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றும் நான் வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2ம்பிரதிவாதியால் சங்கரம்மாள் அறிமுகம் செய்யப்பட்டு, அவர் சீட்டுப்பணத்தை பெற்றுக்கொண்டு தலைமறைவாகிவிட்டார் என்றால் சரியல்ல. சங்கரம்மாள் செலுத்திய வேண்டிய ரூபாய் ஒன்பது இலட்சத்தை 2ம்பிரதிவாதி தான் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டேன் என்றால் சரியல்ல. 18.04.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது வீட்டிற்கு வந்து பிரதிவாதிகள் கேட்டார்கள். நான் உடனே பணம் கொடுத்தேனா என்றால் ஏற்கனவே என்னிடம் பணம் கேட்டிருந்தார்கள். ஏற்கனவே என்றைக்கு கேட்டார்கள் என்றால் இரண்டு மாதமாக கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இரண்டு மாத காலமாக பிரதிவாதிகள் பணம் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்று எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. காலை 10.00லிருந்து 10.30மணிக்குள் பணம் கொடுத்தேன். நான்

ஏழு இலட்சம் ரூபாய் என்னிடமிருந்தும், எனது அண்ணன் குருசாமியிடம் ரூபாய் ஐந்து இலட்சம் கடன் வாங்கியும், மைத்துனர் பாஸ்கரிடம் ரூபாய் ஒரு இலட்சம் வாங்கியும் பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். அவர்களிடம் நான் வட்டிக்கு தான் வாங்கினேன். அதை திருப்பி கொடுத்துவிட்டேன். அவர்களிடம் மாதம் ஒரு ரூபாய் வட்டிக்கு வாங்கினேன். அவர்களுக்கு நான் ஒரு மாத காலத்தில் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன். நான் பிஆர்சி ஓட்டுனராக பணிபுரிந்ததால் எனது சம்பள பணத்திலிருந்து ரூபாய் ஏழு இலட்சம் கொடுத்தேன். எனக்கு ஸ்டேட் பேங்கிலும், யூனியன் பேங்கிலும் வங்கி கணக்குகள் உள்ளது. பிரதிவாதிகளுக்கு கடன் கொடுக்க நான் வங்கியிலிருந்து பணம் எதுவும் எடுக்கவில்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன். எனது வருமான வரி கணக்கை பார்த்தால் மைத்துனரிடமும், அண்ணனிடமும் கடன் வாங்கிய விபரமும், பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்த விபரமும் தெரியவரும் என்றால் சரிதான். நான் கடன் கொடுக்கும் காலத்தில் எனது மாத ஊதியம் ரூ.60,000- பிடித்தம் போக மாதம் ரூ.45,000- கையில் வாங்கினேன். அண்ணனிடமும், மைத்துனரிடமும் கடன் வாங்கிய விபரம் நான் வழக்குரையிலும், நிரூபண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை. நான் அண்ணனிடமும், மைத்துனரிடமும் கடன் வாங்கவில்லை என்றும் என்னிடமும் ரூபாய் ஏழு இலட்சம் இருப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ரூபாய் பதிமூன்று இலட்சம் கடன் கொடுக்க போதிய வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் கடன் பெற்ற விபரமும், கடன் கொடுத்த விபரமும் வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றும் வழக்கிற்காக காட்டியுள்ளேன் என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் சாட்சிகள் முன்னிலையில் கடன் கொடுக்கப்பட்டு புரோ நோட் எழுதியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையை படித்துப் பார்க்கவில்லை. நான் சாட்சிகள் முன்னிலையில் பணம் கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்தில் மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பணம் வாங்கியதும், புரோ நோட் எழுதிக் கொடுத்ததும் எத்தனை சாட்சிகளுக்கு தெரியும் என்றால் எனது மகன் எழுதினார். சாட்சிகள் குருசாமி, பாஸ்கரன் ஆகியோர் இருந்தார்கள். சாட்சிகள் 18.04.2021ம் தேதி எனது வீட்டில் வைத்து கையொப்பம் செய்தார்கள். என் மகன் பி.இ படித்துள்ளார். புரோ நோட் மற்றும் ஸ்டாம்ப் பிரதிவாதிகள் தான் வாங்கி வந்தார்கள்.

சாட்சிகள் இருவரும் நான் கடன் கொடுப்பது தெரிந்து தான் எனது வீட்டிற்கு வந்தார்கள். எனது மனைவி அப்போது உடன் இருந்தார். வேறு வெளி நபர்கள் யாரும் இல்லை. புரோ நோட் எழுதிக்கொடுப்பதற்கு முன்னால் பிரதிவாதிகளின் கையொப்பத்தை பார்க்கவில்லை. எதிர்வழக்குரையில் பிரதிவாதிகளின் கையொப்பம் இல்லை என்று வித்தியாசங்களுடன் சொல்லியுள்ளார். இது தான் என் முன்னிலையில் போட்டார்கள். வா.சா.ஆ.1 புரோ நோட்டில் 1ம்பிரதிவாதியின் கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது. 1ம்பிரதிவாதி எப்பொழுதும் தமிழில் தான் கையொப்பம் செய்வார் என்றும் தமிழ் கையொப்பமும் வா.சா.ஆ.1ல் உள்ள அதே தோற்றத்தில் தான் இருக்கும் என்றும் சொன்னால் இருக்கலாம். இரண்டு பிரதிவாதிகளின் கையொப்பங்களை பார்த்து நான் போர்ஜரியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதிகள் அவர்களது வீட்டை நாகலட்சுமி என்பவரிடம் அடமானம் வைத்துள்ளதாகவும், அதை மீட்பதற்காக என்னிடம் கடன் வாங்கியதாகவும் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 புரோ நோட்டில் குடும்ப அவசர செலவிற்காக கடன் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது. புரோ நோட்டில் அவ்வாறு தான் எழுதுவார்கள். 2ம்பிரதிவாதி நாகலட்சுமியிடம் அடமானம் வைத்த ஆவணத்தை என்னிடம் காண்பித்தார். என்னிடம் பிரதிவாதி சொத்தை விற்ற ஆவணத்தின் நகலை நான் எடுத்தேன். அடமானம் பத்திரத்தில் உள்ள 2ம்பிரதிவாதியின் கையொப்பமும், அடமான சொத்தை விற்பனை செய்த கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பமும் ஒன்று தான். அந்த கையொப்பங்கள் 2ம்பிரதிவாதியினுடையது என்று நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த கையொப்பங்களையும், 1ம்பிரதிவாதியின் கையொப்பங்களையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பங்களுடன் அனுப்பி ஒப்பிட்டு பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. வா.சா.ஆ.1 பிரதிவாதிகளால் எக்காலத்திலும் என்னிடம் ரூபாய் பதிமூன்று இலட்சம் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதிகளின் கையொப்பங்கள் என்னாலும், சாட்சிகளாலும் சேர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு பிரதிவாதிகளிடமிருந்து பணம் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளின் ஆதார் கார்டின் நகலை நான் 2ம்பிரதிவாதியை ஏமாற்றி அவரிடமிருந்து எனது மனைவி மூலமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஆதார் கார்டு நகல் எவ்வாறு என்னிடம் வந்தது

என்று வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் அவரது மனைவி தான் என்னிடம் கொடுத்தார். எனது மனைவி 2ம்பிரதிவாதியை ஏமாற்றி ஆதார் நகலை வாங்கியதால் தான் அது எவ்வாறு வந்தது என்று நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் நான் பணம் பெறுவதற்காக தான் என்னிடம் கொடுத்தார்கள். பிரதிவாதிகள் அடமானத்தை எப்போது திருப்பினார்கள் என்று தெரியாது. விற்று பணத்தை தருவதாக சொன்னார்கள். விற்ற விபரம் எப்போது தெரியும் என்றால் விற்று 10நாளில் தெரியும். 13.08.2021ம் தேதி தெரியும். சொத்தின் அடமானத்தை மீட்பதற்கு 1ம்பிரதிவாதி பாரத ஸ்டேட் வங்கியிலிருந்தும், அவரது அலுவலக வருங்கால வைப்பு நிதியிலிருந்தும் கடன் பெற்றார் என்றால் என்னிடம் அடமானத்தை மீட்டு விற்று பணத்தை தருவதாக தான் பணம் கேட்டார். நான் புரோ நோட் வாங்கி கொண்டு எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு பதிமூன்று இலட்சம் கடன் கொடுத்ததாக நான் பணிபுரியும் அலுவலகத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் அலுவலகத்திற்கு தெரியாது. நான் பிரதிவாதிகள் மீது பொய் வழக்கு போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.